
கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் ஊத்தங்கரை காங்கிரஸ் கட்சி வேட்பாளர் குப்புசாமி, கிருஷ்ணகிரி காங்கிரஸ் கட்சி வேட்பாளர் செல்லகுமார், பர்கூர் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் மதியழகன் எம்.எல்.ஏ. மூன்று வேட்பாளர்களும் மகத்தான வெற்றிவாகை சூட வேண்டும் என்ற சீரிய நோக்கில் தமிழக உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் அமைச்சரும், கிருஷ்ணகிரி மாவட்ட பொறுப்பு அமைச்சரும், மண்டல பொறுப்பாளருமான அர.சக்கரபாணி மூன்று சட்டமன்ற தொகுதி நிர்வாகிகளுடன் ஆலோசனை கூட்டத்தில் சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வெற்றிச்செல்வன், மாவட்ட அவை தலைவர் நாகராஜ், தொகுதி பொறுப்பாளர் பார்.இளங்கோவன், நாடாளுமன்ற உறுப்பினர் கோபிநாத் மற்றும் கட்சி நிர்வாகிகள் கூட்டணி கட்சி நிர்வாகிகள் ஏராளமானோர் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

### அரியலூர் தொகுதி வேட்பாளர் லதா பாலு அறிமுக செயல்வீரர்கள் கூட்டம்

# பீகாரைப் போலவே கூட்டணிக் கட்சியான அ.தி.மு.க.வை பா.ஜ.க. விழுங்கத் திட்டம்!

## அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் பேச்சு!



அரியலூர், ஏப். 12 -

அரியலூர் சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் மாபெரும் வெற்றியை உறுதி செய்யும் விதமாக, திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெற்றி வேட்பாளர் லதா பாலுவை அறிமுகம் செய்யும் மாபெரும் கூட்டம் மாவட்ட துணை செயலாளர் சி.சந்திரசேகரன் தலைமையில் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்துகொண்டு அரியலூர் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் லதாபாலுவை அறிமுகம் செய்து வைத்து பேசியதாவது:

தேர்தலுக்கு சிலநாட்களே உள்ள நிலையில் கூட, இது வரை தமிழ்நாட்டில் அதிமுக தான் முதலமைச்சர் வேட்பாளர் என மோடி, அமித்ஷா ஆகியோர் சொல்லவில்லை பீகார், மஹாராஷ்டிரா போன்று கூட்டணி கட்சியின் ஆட்சியை பறிக்கப் போவதில்லை. மாறாக அதிமுக எனும் கட்சியையே பாஜக விழுங்கப் போகிறது.

நடைபெறுகின்ற தேர்தல் என்பது டெல்லிக்கும், தமிழ்நாட்டிற்குமான தேர்தல். இதில் வெற்றி பெற வேண்டியது நாம். நாம் என்றால் அது தமிழ்நாடு என்பதை தான் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடர்ந்து முன்னிலைப்படுத்தி பேசி வருகிறார். பல்வேறு மாநிலங்களில் பாஜக பின்வாசல் வழியாக ஆட்சியை கைப்பற்றி வருகிறது.

ஆறு மாதத்திற்கு முன்பாக பீகார் சட்டமன்றத் தேர்தலில் நிதீஷ்குமாரை முதலமைச்சர் என மோடி பிரச்சாரம் செய்தார். அங்கே தன்னுடைய கட்சியான பாஜக தான் முதலமைச்சர் என்று சொல்லி இருந்தால், பீகாரிலே நிதிஷ்குமார் வெற்றி பெற்றிருக்க முடியாது.

நம்முடைய தமிழ்நாடு, கேரளாவை போல வடநாட்டில் பீகார் வித்தியாசமான மாநிலம். அங்கே பாஜகவின் பாட்ச்சா பலிக்காத மாநிலம். நிதீஷ்குமார் தான் முதலமைச்சர் என மோடி பிரச்சாரம் செய்தார். இன்னும் ஆறு மாதங்கள் கூட ஆகாத நிலையில் தற்போது அங்கே நிதிஷ் குமாரை ராஜினாமா செய்ய சொல்லியுள்ளார். அவர் ராஜ்யசபா உறுப்பினராக, பதவியேற்று தனது சட்டமன்ற மேல் சபை பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

பதவியேற்ற 6 மாதத்திலேயே நிதீஷ்குமார் பதவியை பிடுங்கும் படுபாதக செயலைதான் பாஜக இன்று செய்துள்ளது.

மகாராஷ்டிராவில் சிவசேனா தலைமையில் ஒரு ஆட்சியை கலைத்து ஏக்நாத் ஷிண்டேவை முதலமைச்சராக்கினர். அடுத்த ஆறு மாதத்தில் நடைபெற்ற தேர்தலில் வென்ற பிறகு ஏக்நாத் சிண்டேவிற்கு அல்வா கொடுத்து, பிஜேபி அங்கே முதலமைச்சர் பதவியை பிடுங்கிக்கொண்டது.

நிதீஷ் குமார், ஏக்நாத் ஷிண்டே ஆகியோருக்கெல்லாம் ஆட்சி மட்டுமே போனது. ஆனால் தமிழ்நாட்டில் என்ன நடக்கப்போகிறது? என்றால், எடப்பாடி வசம் ஆட்சி இல்லை, மாறாக கட்சி உள்ளது. தற்பொழுது அதிமுக எனும் கட்சியை பாஜக விழுங்க போகிறது.

அதைத்தான் நம்முடைய முதலமைச்சர் அதிமுகவினிடம் இரண்டு வருட காலமாக குறிப்பிட்டு வருகிறார்கள். விழித்துக் கொள்ளுங்கள். உங்கள் கட்சியை கூட்டணி என்ற பெயரில், பாஜக குழி தோண்டி புதைக்கிறது. கொல்லைப்புற வழியாக பாஜக தமிழ்நாட்டுக்கு வர துடிக்கிறது. தன் மீதுள்ள வழக்குகளுக்கு பயந்து கொண்டு அதிமுகவை அடமானத்தை வைத்து எத்தனை சீட்டு என்று அறிவிப்பதற்கு கூட டெல்லி போய் சென்று ஒப்புதல் வாங்கி வருகிறார் எடப்பாடி பழனிசாமி.

தற்போதுவரை கூட அமித்ஷா, மோடி போன்றவர்கள் தமிழ்நாட்டில் அதிமுக ஆட்சி என்றோ, எடப்பாடி பழனிச்சாமி முதலமைச்சர் என்றோ அறிவிக்கவில்லை. NDA கூட்டணி ஆட்சி என்றுதான் அவர்கள் சொல்கிறார்கள். இதிலிருந்து பாஜக எந்த அளவிற்கு அதிகார மமதையில், பாசிச மனநிலையில் இருக்கிறார்கள் என்பது புரிகிறது. அந்த பிஜேபி தமிழ்நாட்டில் உள்ளே நுழையாமல் இருப்பதற்கான தேர்தல் தற்போது நடைபெறுகிறது.

இந்தியாவிற்கு ஒரு விடுதலை போராக இந்த தேர்தலில் நாம் வெற்றி பெறுவதை வைத்து, மற்ற மாநிலங்களுக்கு எல்லாம் அது முன்னுதாரமாக அமையும் என்று அமைச்சர் சா.சி.சிவசங்கர் உரையாற்றினார்.

நடைபெற்ற அரியலூர் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் லதாபாலு அறிமுக கூட்டத்தில் அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, அரியலூர்சட்டமன்ற தொகுதி மேற்பார்வையாளர் ப.அன்பரசு, மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் மாவட்ட கழக செயலார்கள் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி மாவட்ட தலைவர் மாரியம்மாள், தேசிய முற்போக்கு திராவிடர் கழக மாவட்ட செயலாளர் ஜெயவேல், விடுதலை சிறுத்தைகள் மாவட்ட கழக செயலாளர் அங்கனூர் சிவா, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் இளங்கோவன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் நடராஜன், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக மாவட்ட செயலாளர் ராமநாதன், திராவிட கழக மாவட்ட கழக செயலாளர் விடுதலை நீலமேகம், மனிதநேய மக்கள் கட்சி மாவட்ட கழக செயலாளர் சாகுல் ஹமீது, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி மாவட்ட செயலாளர் சையது இப்ராஹிம், மனிதநேய ஜனநாய கட்சி மாவட்ட செயலாளர் அக்பர் அலி, இந்திய குடியரசு கட்சி மாவட்ட தலைவர் ராஜீவ் காந்தி, எஸ்.டி.பி.ஐ. மாவட்ட செயலாளர் அமீன் சுல்தான், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் இரா. கென்னடி, கோ.அறிவழகன், மா.அன்பழகன், அசோகசக்ரவர்த்தி, தனவேல், இரா.அண்ணாதுரை, தெய்வ.இளையராஜா, ஏ.ஜி.எஸ்.முருகன், நகர கழக செயலாளர் இரா. முருகேசன், பொதுக்குழு உறுப்பினர் இரா.பாலு, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், தோழமை கட்சி நிர்வாகிகள், கழக தோழர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

### சட்டப்பேரவை பொதுத்தேர்தல் - 2026

# தொகுதிப் பார்வையாளர்கள் நியமனம்!

**(9வது பட்டியல்)**

## தலைமைக் கழகம் அறிவிப்பு!

நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தல் பணிகளை ஒருங்கிணைக்கும் வகையில் முதற்கட்டமாக கீழ்கண்டவாறு சட்டமன்றத் தொகுதிகளின் பார்வையாளர்கள் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்படுகிறார்கள்.

கழக நிர்வாகிகள் மற்றும் தோழர்கள் முழு ஒத்துழைப்பு வழங்கிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| சட்டமன்றத் தொகுதி | - பார்வையாளர் |
|---|---|
| பெரம்பூர் | – எஸ்.ஜோயல் |
| வேளச்சேரி | – ஆர். கிரிராஜன், எம்.பி., |
| கும்மிடிப்பூண்டி | – வி.எஸ்.அரிபாபு |
| பாப்பிரெட்டிப்பட்டி | – சி.வி.எம்.பி.எழிலரசன் |
| வந்தவாசி | – நரேஷ்குமார் |

குறிப்பு : ஏற்கனவே தொகுதி பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டவர்களுடன் இவர்கள் இணைந்து பணியாற்றுவார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 10.04.2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.


பொய்யான வாக்குறுதிகளை நம்பி அ.தி.மு.க.விற்கு வாக்களித்து, கடந்த 15 ஆண்டுகளாக தொகுதி மக்களை மறந்தவர்களின் துரோக செயல்பாடுகளை களைந்து, நன்னிலம் தொகுதி மக்களின் நலனில் அக்கறை கொண்ட ஒருவரை அடையாளம் காட்டிய கழக தலைவர் தளபதி அவர்களின் வழி காட்டுதல்களின்படி, நன்னிலம் சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் எஸ்.டி.பி.ஐ. கட்சியின் வெற்றி வேட்பாளர் வி.எம்.எஸ்.முகமது முபாரக் அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் மாவட்ட செயலாளர் பூண்டி. கே.கலைவாணன் பிரச்சாரம் மேற்கொண்டார். உடன் ஒன்றிய செயலாளர் வீ.அன்பரசன், கோ. தெட்சிணாமூர்த்தி உள்ளனர்.


மன்னார்குடி நகர பகுதியில் வெற்றி வேட்பாளர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா வாக்கு சேகரித்தார். நகர செயலாளர் வீரா.கணேசன், நகர்மன்ற தலைவர் மன்னை.த.சோழராஜன் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், பெருந்திரளான பொதுமக்கள் பங்கேற்றனர்.

### கோவை தெற்கு சட்டமன்ற தொகுதியில் கழக வேட்பாளர்

# வி.செந்தில்பாலாஜி வீதி வீதியாகச் சென்று வாக்கு சேகரிப்பு!

கோவை, ஏப். 12 -

கோவை தெற்கு சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் தொகுதி கழக வேட்பாளர், மேற்கு மண்டல பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி வீதி வீதியாகச் சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்து வருகிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் நல்லாசியுடன் தி.மு.கழகத்தின் சார்பில் போட்டியிடும் கோவை தெற்கு சட்டமன்ற தொகுதி வேட்பாளர், கழக மேற்கு மண்டல பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி கோவை தெற்கு சட்டமன்ற தொகுதி, சிவானந்தா குடியிருப்பு பகுதிக்குட்பட்ட ஹோஸ்பின் நகர், கண்ணுசாமி லேஅவுட், விகேசி லேஅவுட், கந்தசாமி லேஅவுட், அண்ணா புது வீதி, கோவிந்தசாமி லேஅவுட், காந்திநகர், மாஸ்தியம்மாள் லேஅவுட், அண்ணா நகர், ஹட்கோ குடியிருப்பு 1 முதல் 8 வீதிகள், அழகப்பா ரோடு, மாரியம்மன் கோவில் வீதி, டாக்டர் ராதாகிருஷ்ணா ரோடு, இச்சிப்பட்டி குடியிருப்பு பகுதி, கருணா குடியிருப்பு பகுதி, டாடாபாத் 7 முதல் 5 வீதிகள், டாக்டர்.ராதாகிருஷ்ணா ரோடு, டாடா பாத் 9 முதல் 1 வீதிகள், வள்ளுவர் வீதி, டேங்க் ரோடு, எஸ். என்.தாஸ் லேஅவுட், விசிகே ராமச்சந்திரா லேஅவுட், ஈ.பி.கோட்ரஸ், சுப்புராயன் ரோடு, ஈ.பி.ரோடு மேற்கு, கிழக்கு வீதிகள், டாடாபாத் 10 வது வீதி, காந்திபுரம் 9 முதல் 5 வீதிகள் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள பொது மக்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். பொதுமக்கள் ஆரத்தி எடுத்து சிறப்பான வரவேற்பளித்தனர்.

அப்போது அவர் கோவை தெற்கு சட்டமன்ற தொகுதியை தமிழகத்திலேயே முன்மாதிரி தொகுதியாக மாற்றுவேன், வணிக நிறுவனங்கள் நிறைந்த கோவை தெற்கு பகுதியில் நிலவும் போக்குவரத்து நெரிசலுக்கு தீர்வுகாணும் வகையில், அடுத்த 5 ஆண்டுகளில் பிரம்மாண்டமான பல்லடுக்கு வாகன நிறுத்துமிடம் அமைக்கப்படும். கோவை தெற்கு தொகுதி, வளர்ச்சியில் முதன்மை இடத்தைப்பிடிக்கும். கடந்த 2021ம் ஆண்டு முதல் தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசு பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

குறிப்பாக கலைஞர் மகளிர் உரிமைத் தொகையாக பெண்களுக்கு மாதம் 1000 ரூபாய், அரசுப் பேருந்துகளில் பெண்களுக்கு இலவசப் பயணம், உயர்கல்வி பயிலும் மாணவ, மாணவியருக்கு ஊக்கத்தொகை, 2 லட்சம் விவசாயிகளுக்கு புதிய மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. கோவை மாநகராட்சியின் வளர்ச்சிக்காக கடந்த 5 ஆண்டுகளில் மட்டும் ரூபாய் 8,200 கோடி மதிப்பிலான திட்டங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கியுள்ளார்.

கோவை மாநகரின் மையப்பகுதியில் உலகத்தரத்திலான செம்மொழிப் பூங்கா, ரூ.300 கோடி மதிப்பீட்டில் 7 அடுக்குகள் கொண்ட பெரியார் அறிவுலகம் அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் புறக்கணிக்கப்பட்ட சாலைகள் சீரமைக்கப்பட்டுள்ளது. கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் மீண்டும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைந்தவுடன் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை ரூ.2,000 ஆக உயர்த்தி வழங்கப்பட உள்ளது, இல்லத்தரசிகளுக்கு ரூபாய் 8,000 மதிப்பிலான கூப்பன்கள் வழங் கப்படும்.

கோவையின் பம்பு செட் உற்பத்தியாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் விவசாயிகளுக்கு நவீன பம்பு செட்கள் வழங்கப்படும் இத்திட்டங்கள் அனைத்தும் தொடர்ந்திட எனக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து என்னை வெற்றிபெறச் செய்யுங்கள். நீங்கள் எப்போது அழைத்தாலும் வர தயாராக இருக்கிறேன் என்று கூறினார்.

### நாமக்கல் மேற்கு மாவட்டம்

# பரமத்தி வேலூரில் கே.எஸ்.மூர்த்தி தீவிர பிரச்சாரம்!

## பெண்கள் ஆரத்தி எடுத்து உற்சாக வரவேற்பு!

நாமக்கல், ஏப். 12 -

நாமக்கல் மேற்கு மாவட்டம் பரமத்தி வேலூர் சட்டமன்றத் தொகுதியில் திமுக சார்பில் போட்டியிடும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் நாமக்கல் மேற்கு மாவட்ட திமுக பொறுப்பாளருமான கே.எஸ்.மூர்த்தி தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார்.

அதன் ஒரு பகுதியாக பரமத்தி அருகிலுள்ள மாவுரொட்டி, ஓவியம்பாளையம், வெள்ளாளபாளையம், கரட்டுப்பாளையம், தேவிபாளையம், கீழக்கரை மறவாபாளையம் உள்ளிட்ட பகுதிகளில் வீடு வீடாகச் சென்று பொதுமக்களை சந்தித்து வாக்கு சேகரித்தார்.

அப்போது நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் வரிசையாக நின்று பூக்கள் தூவியும், ஆரத்தி எடுத்தும் அவருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்.

பொதுமக்களிடம் பேசிய கே.எஸ்.மூர்த்தி, தாம் வெற்றி பெற்ற பின்னர் அப்பகுதி மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுப்பேன் என உறுதியளித்தார்.

இந்த வாக்கு சேகரிப்பின் போது நாமக்கல் மேற்கு மாவட்ட திமுக விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் மகிழ் பிரபாகரன், பரமத்தி பேரூர் செயலாளர் ரமேஷ் பாபு, பரமத்தி பேரூராட்சித் தலைவர் மணி, நாமக்கல் மேற்கு மாவட்ட பொறியாளர் அணி தலைவர் அருண் பிரதாப் சக்கரவர்த்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.


தருமபுரி மாவட்டம், 57 பாலக்கோடு சட்டமன்றத் தொகுதி, காரிமங்கலம் ஒன்றியத்திற்கு உட்பட்ட அண்ணாமலைஅள்ளி புதூர், அந்தேரிகாடு, கலைஞர் நகர், எலுமிச்சனஅள்ளி உள்ளிட்ட ஊராட்சி பகுதிகளில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் பாலக்கோடு சட்டமன்றத் தொகுதி தி.மு.க. வேட்பாளர் டாக்டர். டிஎன்.வி.எஸ்.செந்தில்குமார், திராவிட மாடல் அரசின் சாதனைகளை எடுத்துரைத்து உதயசூரியன் சின்னத்திற்கு ஆதரவு கேட்டு, தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். தேர்தல் பிரச்சாரத்தின் போது தொகுதி பார்வையாளர் டி.அரியப்பன், காரிமங்கலம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் எம்.வி.டி.கோபால் உள்ளிட்ட கழக மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள், தோழர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.